**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,அன்னூர்.</u>**

**<u>O.S.No. 365 / 2023</u>**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், செவ்வாய்க்கிழமை 24–ம் நாள் திரு. செந்தில்குமார் என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873ம் ஆண்டு 10வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. வெ.மோனிகா, பி.ஏ.,பி.எல்.,எல்.எல்.எம்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிபதி, அன்னூர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்குமார் | வயது | 40 |
| த.பெ. | ராமசாமி | தாலூக்கா | அன்னூர் |
| கிராமம் | அன்னூர் | மாவட்டம் | கோவை |
| தேதி | 24.02.2026 | PW – 2 | |

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது குன்னத்தூர் கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் நான் சாட்சியமளிக்கவேண்டி எனக்கு அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தை நேரில் சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். இந்த வழக்கில் நான் சாட்சியமளிக்க வந்துள்ள குன்னத்தூர் கிராமத்தின் க.ச.எண்கள்.415/1B2 மற்றும் 418/2 ஆகியவற்றின் அனைத்து வகையான வருவாய் ஆவணங்களை கொண்டுவந்துள்ளேனா என்றால் கொண்டுவந்துள்ளேன். என்னென்ன ஆவணங்களை கொண்டு வந்துள்ளேனா என்றால் அ – பதிவேடு (RSR Record), புலவரைபடங்கள், கிராம வரைபடம் மற்றும் அடங்கள் ஆகியவற்றினை கொண்டு வந்துள்ளேன். (**<u>மேற்கண்ட ஆவணங்கள் அடங்கிய தொகுப்பு Ex.X1 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**).

2. இந்த வழக்கின் வழக்கு சொத்தான வாதியின் வீடு பழனியம்மாள் வீட்டிற்கும், காலி இடத்திற்கும் வடக்கு, கோவை – சத்தி ரோட்டிற்கும் மேற்கு, கிழமேல் இட்டேரிக்கும் தெற்கு மற்றும் பழனியப்ப செட்டியார் வகையறா காலி இடத்திற்கும் கிழக்கு என்ற நான்கு எல்லைகளுக்குள் அமைந்துள்ள சொத்து எந்த காலை எண்ணில் அமைந்துள்ளது என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியும். அந்த சொத்து க.ச.எண்.415/1B2 –ல் அமைந்துள்ளது.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

S/d.V.Monika
District Munsif Cum Judicial Magistrate
Annur